- பணம் சம்பாதிப்பது ஒரு திறமை என்று கூறினால், அதைவிட பணத்தை சேமித்து வைப்பதும் ஒரு பெரிய திறமை என்று தான் சொல்ல வேண்டும்.

- சிலர் எவ்வளவு தான் கடினமாக உடலை வருத்தி உழைத்தாலும் சம்பாதித்த பணம், பெட்டியில் அதிக நாள் தங்குவதில்லை. இன்னும் சிலருக்கு அதிக நேரம் கூட தங்குவதில்லை. இத்தகைய நிலையை மாற்ற அதாவது ஒருவருக்கு திடீரென எதிர்பாராத பண வரவை அதிகரிக்கக்கூடிய சில எளிய ஆன்மீக விஷயங்களை பார்க்கலாம்.

## லட்சுமி குபேர பூஜை

- ஒருவரது வீட்டில் செல்வம் அதிகரிக்கவும், சேர்ந்த செல்வம் குறையாமல் இருக்கவும் செய்ய வேண்டிய மிகச்சிறந்த பூஜை லட்சுமி குபேர பூஜை. இப்பூஜையின் மூலம் செல்வத்திற்கு அதிபதியான குபேரனின் அருள் மட்டுமல்லாமல் மகாலட்சுமியின் அருளையும் பெற முடியும்.

- தீபாவளி அன்று லட்சுமி குபேர பூஜை செய்வதால் நம் இல்லத்தில் சகல ஐஸ்வர்யங்களும் பெருகும் என்பது ஐதீகம்.

- லட்சுமி குபேர பூஜை செய்ய உகந்த நாள் தீபாவளி திருநாள். மேலும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் பூரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் பூஜை செய்வது மிகுந்த பலன்களை தரும். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் விரதம் இருந்து லட்சுமி குபேர பூஜை செய்யலாம்.

- தீபாவளி அன்று லட்சுமி குபேர பூஜையோடு குபேர பகவானுக்கு நாணய வழிபாடு செய்வதும் மிகமிக சிறப்பு வாய்ந்தது.

- தீபாவளி அன்று குபேர பகவானுக்காக செய்யப்படும் இந்த நாணய வழிபாடு, நிலையான செல்வத்தை நமக்கு அருளும் என்பது நம்பிக்கை.

### லட்சுமி குபேர பூஜை :

- பூஜை மாடத்தில் லட்சுமி குபேர படத்தினை வைத்து இருபக்கமும் குத்துவிளக்கு ஏற்ற வேண்டும். இப்படத்திற்கு முன்பாக பெரிய வாழை இலை வைத்து அதில் நவ தானியங்களை பரப்பி வைக்க வேண்டும். நடுவில் சுத்தமான தண்ணீர் நிரம்பிய சொம்பை வைத்து அதில் மஞ்சள் கலந்து பின் மாவிலை சொருகி அதன்மேல் ஓர் தேங்காய் வைத்திட

வேண்டும். அதற்கு மஞ்சள் குங்குமம் வைத்து பூக்களால் அலங்கரித்திட வேண்டும்.

- பின் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து பூஜையை செய்ய வேண்டும். நமக்கு தெரிந்த விநாயகர் துதி மற்றும் பாடல்களை பாடி பூஜையை ஆரம்பிக்க வேண்டும். பின் மகாலட்சுமியை வணங்கி போற்றி வழிபட வேண்டும்.

- அதன்பின் குபேர மந்திரங்கள் (அ)

**'குபேராய நமஹ'**
**'தனபதியே நமஹ'**

- என 108 முறை சொல்லி தாமரை இதழ்கள் (அ) பூக்களால் பூஜிக்க வேண்டும். தாமரை மலர், லட்சுமி மற்றும் குபேரனுக்கு உகந்த மலர்.

- பின் நைவேத்தியமாக இனிப்புகள் மற்றும் பால் பாயாசம் போன்றவை வைத்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும். பூஜையில் தட்சணையாக காசுகள் (நாணயங்கள்) வைக்கப்பட வேண்டும். அதனை பூஜை முடிந்தவுடன் எடுத்து நமது பெட்டகங்களில் வைத்துவிடலாம். லட்சுமி குபேர பூஜை தீபாவளி தினத்தில் செய்யும்போது வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதுடன் குபேரன் சகல ஐஸ்வர்யத்தையும் வாரி வழங்கிடுவார்.

- இந்த பூஜையை செய்வதால் வீட்டில் நிச்சயம் பணத்தட்டுப்பாடு நீங்கி செல்வம் பெருகும். அதோடு வீட்டில் நிம்மதியும், சந்தோஷமும் நிலைக்கும்.

- குபேர பகவானுக்கு செய்யப்படும் நாணய வழிபாட்டை தொடர்ந்து 9 வெள்ளிக்கிழமைகள் அல்லது 9 பௌர்ணமிகள் செய்யலாம். இவ்வழிபாட்டை ஆண்டுக்கு 2 முறை செய்தால் பணத்தட்டுப்பாடு இருக்காது.

## குபேர ரகசியங்கள்

- வங்கியில், பீரோவில் வறட்சி கூடாது. இருப்புத் தொகை அதாவது குறிப்பிட்ட தொகை இருக்கும்போதே செலவை நிறுத்திவிட வேண்டும். நாள்தோறும் கண்கள் பணத்தை பார்த்துக்கொண்டே இருக்கும் வகையில் பசுமையை பராமரிக்கவும்.

- தூய்மையற்ற இடத்திற்குள் திருமகள் நுழைய மாட்டாள். வீடு, அலுவலகம், கல்லாப்பெட்டி, பணப்பை என செல்வம் புழங்க வேண்டிய இடங்களை எப்போதும் தூய்மையாக வைத்து பராமரிக்கவும்.

- வணிகத்தை, தொழிலை, அலுவலகப் பணியை மனமலர்ச்சியுடன் செய்யுங்கள். சிரிப்பவர்களை பார்த்தே செல்வ லட்சுமி வருகிறாள். சிடு மூஞ்சிகளையும், அழு மூஞ்சிகளையும் பார்த்து மூதேவிதான் விரும்பி வருகிறாள். சிரித்து வாழுங்கள்.

- குபேர லிங்கம் படத்தை பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுங்கள். பண வருமானம் குறையாது.

- வெள்ளிக்கிழமைகளில் பூவும், காசும் சமர்ப்பித்து 108 குபேரன் போற்றி சொல்லிக் குடும்பத்துடன் வணங்கி வந்தால் வருமானம் பெருகும்.

- வடக்கு திசையானது குபேரனுக்காக இருப்பதால் வீடுகளில் பணம் அல்லது நகைகள் வைக்கும் பெட்டி அல்லது 'பீரோ' வடக்கு திசை பார்த்து திறப்பது போல இருக்கவேண்டும்.

- தென்கிழக்கு பகுதியில் உள்ள அறை அல்லது மற்ற அறைகளில் உள்ள தென்கிழக்கு மூலையில் பணம் அல்லது நகைப்பெட்டியை வைக்க கூடாது.

- அக்னி பாகம் தவிர மற்ற அறைகளில் பணம் வைக்கும் 'பீரோவை' வைப்பதென்றால், அதன் தென்மேற்கு பகுதியில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கியபடி வைக்க வேண்டும்.

- குபேரரின் திசையான வடக்கு திசையில் குபேர சிலையை வைத்து வழிபடுவது மேலும் செல்வம் சேர வழிவகுக்கும்.

## குபேர பொம்மை பற்றிய தகவல்கள்

வீட்டின் கிழக்கு திசை தான் குடும்பத்தின் அதிர்ஷ்ட புள்ளியாக கருதப்படுகிறது. குடும்பத்தில் ஒற்றுமையும், சந்தோஷமும் நிலைக்க சிரிக்கும் குபேர பொம்மையை வீட்டின் கிழக்கு திசையில் வைக்க வேண்டும்.

குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டைகள், சச்சரவு, வாக்குவாதம், வீட்டில் இருப்பதற்கே உங்களுக்கு பிடிக்காமல் இருக்கும் நிலை ஏற்படும் நேரங்களில், கிழக்கு திசையில் குபேர பொம்மையை வைத்தால் மனதிற்கு உறுதியை கொடுக்கும்.

கிழக்கு திசையில் குபேர பொம்மையை வைப்பதால் செல்வம் பெருகுவதோடு வாழ்க்கையில் வெற்றி கிடைக்க உதவிடும். குபேர பொம்மையை படுக்கையறை அல்லது உணவருந்தும் அறை என எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம்.

தென்கிழக்கு திசையில் வைத்தால் எதிர்பாராத அதிர்ஷ்டமும், நிறைவான வருமானமும் கிடைக்கும். எப்போதும் சிரித்து கொண்டிருக்கும் குபேர பொம்மையை பார்க்கும் போது மன அழுத்தம் குறைவதோடு, பிரச்சனைகளை எதிர் நோக்க புது நம்பிக்கை பிறக்கும்.

குபேரரின் செல்வத்தை பெற இவரை கிழக்கு திசையில் வைத்து வழிபட வேண்டும். ஒவ்வொரு நாளும் குபேரரை துதித்து வந்தால் வீட்டில் என்றும் குறைவில்லாமல் செல்வம் பெருகிக் கொண்டே போகும்.

## செல்வ செழிப்புடன் இருக்க ஜோதிட ரகசியங்கள்

- காலையில் எழுந்தவுடன் உள்ளங்கைகளை தான் பார்க்க வேண்டும்.
- குளித்த பின்பு முதுகைத்தான் முதலில் துடைக்க வேண்டும். பின்புதான், முகத்தை துடைக்க வேண்டும். குளித்தவுடன் துவட்டும்போது முதலில் மூதேவி தான் உடலில் இடம் பிடிப்பாள். பின்தான் லட்சுமி வருவாள்.
- பூஜைகளில் அல்லது கடவுளை வணங்கும் சமயத்தில் கைலிகள் என அழைக்கப்படும் லுங்கிகள் அணியக்கூடாது.
- சாப்பிடும் போது இடதுகை எப்போதும் வட்டிலை தொட்டுகொண்டுதான் இருக்க வேண்டும். வட்டிலை தட்டு என்று சொல்லக்கூடாது. அது தட்டுபாட்டுக்கு உரிய சொல்.